بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *06/09/2024* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## அகழ்ப் போரைப் பின்னணியாகக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

இன்று நான் அகழ்ப் போர் அல்லது அஹ்ஸாப் போர் என்றும் கூறப்படும் போரைப் பற்றி எடுத்துக் கூறுவேன். இது ஹிஜ்ரீ 5 ஆம் ஆண்டு, கி.பி.627 ஆம் ஆண்டும் பிப்ரவரி, மார்ச்சில் நடைபெற்றது.

*இதற்குப் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சூரா அஹ்ஸாபின் 10 முதல் 26 வரையிலான வசனங்களை ஓதி, இந்த அருளுக்குரிய வசனங்களின் மொழியாக்கத்தையும் எடுத்து வைத்தார்கள். மொழியாக்கத்தை முன் வைத்த பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள்* ***இந்தப் போரின் பெயர்க் காரணத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்:*** இதை ஏன் அகழ்ப் போர் என்று கூறுகிறார்கள் என்றால், இந்தப் போரில் அரேபியாவின் வழக்கத்திற்கு மாற்றமாக முஸ்லிம்கள் முதன்முறையாக அகழி தோண்டி நகரத்தைத் தற்காத்துக் கொண்டார்கள். இவ்வாறே இதை அஹ்ஸாப் போர் என்றும் கூறுவார்கள். திருக்குர்ஆனும் இதற்கு இந்தப் பெயரை வழங்கியுள்ளது. ‘அஹ்ஸாப்’ எனும் சொல் ‘ஹிஸ்ப்’ எனும் சொல்லின் பன்மையாகும். அதன் பொருள் கூட்டம், குழு என்பதாகும். இந்தப் போரில் அரேபியாவின் பல்வேறு கூட்டங்களும், குழுக்களும் ஒன்றுசேர்ந்து முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்தன. எனவே, இது அஹ்ஸாப் போர் எனப்படுகிறது.

**இந்தப் போர் நிகழக் காரணமாக அமைந்தது** என்னவென்றால், ஹிஜ்ரீ 4 ஆம் ஆண்டு, ரபீயுல் அவ்வல் மாதத்தில் யூதர்களின் பனூ நஸீர் கோத்திரம் தனது உடன்படிக்கை மீறல், கிளர்ச்சி மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொலை செய்வதற்கான சூழ்ச்சி ஆகியவற்றின் காரணமாக மதீனாவிலிருந்து நாடுகடத்தப்பட்டிருந்தது. இந்தக் கோத்திரம் கைபரில் சென்று குடியமர்ந்திருந்தது. நான்கு மாதங்கள்தான் கழிந்திருக்கும்; அதற்குள், (தங்கள் மீது புரியப்பட்ட) பேருதவியை மறந்த, சதிதிட்டங்களை மேற்கொள்கின்ற யூதர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும், இஸ்லாத்திற்கும் எதிராக மிகவும் பயங்கரமான திட்டம் தீட்டினார்கள். இவர்களின் தலைவன் ஹுயை பின் அக்தப் என்பவன், தலைமை அந்தஸ்த்தைப் பெற்றிருந்த தன்னுடைய கூட்டாளிகளுடன் சேர்ந்து மக்காவுக்குச் சென்றான். அங்கு அபூ சுஃப்யான் மற்றும் பிற குறைஷிய பெரியவர்களைச் சந்தித்தான். முஸ்லிம்களுக்கு எதிராக தாங்கள் உதவுவதாக அவர்களுக்கு நம்பிக்கையூட்டினான். மேலும், ‘நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு உடன்படிக்கை செய்ய வேண்டும்’ என்று ஆலோசனை கூறினான்.

அபூ சுஃப்யான் இந்த யூதத் தலைவர்களை வரவேற்றார். மேலும், 'நீங்கள் எல்லாம் உங்கள் வீட்டிற்கு வந்துள்ளீர்கள். எவர் முஹம்மத் {(ஸல்)} அவர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாரோ அவரே எங்களுக்கு எல்லாரையும் விட அதிகம் பிடித்தவர் ஆவார்' என்று கூறினார். குறைஷிகளுடன் சேர்ந்து சதி செய்த பிறகு, யூதர்களின் இந்தக் குழு அரேபியாவின் மற்ற கோத்திரங்களிடம் சென்றது. எல்லாவற்றிற்கும் முதலாக பனூ ஃகத்ஃபானிடம் சென்றடைந்தது. இந்தக் கோத்திரமும் முஸ்லிம்களிடம் கடுமையான பகைமை கொண்டிருந்தது. யூதர்கள் இவர்களை இணங்க வைப்பதற்காக மற்ற விஷயங்களோடு சேர்த்து, கைபரின் ஓராண்டு கால பேரீத்தம் பழங்களையும் தருவதாக வாக்குறுதியளித்தார்கள். பனூ ஃகத்ஃபான் கோத்திரத்தினர் யூதர்களுக்கு உதவுவதாகத் தீர்மானித்தனர். தங்கள் தரப்பிலிருந்து 6000 பேர் கொண்ட படையை வழங்குவதாக உத்தரவாதம் அளித்தனர். இதற்குப் பிறகு, யூதர்களின் இந்தக் குழு பனூ சுலைம் கோத்திரத்திடம் சென்றடைந்தது. அது ஏற்கனவே முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுப்பதற்கு உறுதியான எண்ணம் கொண்டிருந்தது. ஆனால், (அதற்கான முயற்சியில்) தோல்வியடைந்திருந்தது. இவ்வளவு பெரிய தாக்குதல் பற்றி அதற்குத் தெரியவந்ததும், அதுவும் மகிழ்ச்சியாக ஆதரவு தெரிவித்தது.

இவ்வாறே பனூ ஃபஸாரஹ் கோத்திரம் தன் தலைவரான உயைனாவின் தலைமையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் போர் புரிய இணங்கியது. உயைனா தமது தோழமைக் கோத்திரமான பனூ அஸதுக்கு அழைப்பு விடுத்தார். எனவே, அவர்களும் இந்தப் போரில் முஸ்லிம்களுக்கு எதிராக போரிட ஆயத்தமாகி விட்டனர். இவ்வாறே இன்னுஞ்சில கோத்திரங்களும் யூதர்களின் இந்த ஒற்றுமையின் அங்கமாகி விட்டன. இந்த எல்லாக் கோத்திரங்களும் தங்களுடைய வீரம் மற்றும் போர் திறன் காரணமாக அரேபியா முழுவதும் பிரசித்தி பெற்றிருந்தன.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** யூதர்கள் பெரும் சாதுர்யம் மிக்கவர்களாக, தந்திரசாலிகளாக இருந்தனர். இது போன்ற சதி வேலைகளில் நன்றாகத் திறமை படைத்திருந்தனர். எனவே, அவர்களுடைய குழப்ப முயற்சிகள் செயலாற்றின. அரேபிய கோத்திரங்கள் ஒருயிராகி முஸ்லிம்களுக்கு எதிராக போர்க்களத்துக்கு வந்தன.

**இது குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** அரேபியாவின் 'கைபர்' யூதர்களின் மிகப்பெரும் தலைமையகமாகவும், (நுழைவில்) கோட்டைச் சுவர்களைக் கொண்ட நகரமாகவும் இருந்தது. இங்கு சென்றடைந்து பனூ நஸீர் கோத்திரத்தினர் முஸ்லிம்களுக்கு எதிராக அரேபியர்களிடம் உத்வேகத்தைப் பரப்பத் துவங்கினர். ஒரு நீண்ட ஆயத்தத்திற்குப் பிறகு அரேபியாவின் பயங்கரமான படைகள் அனைத்தின் ஒற்றுமைக்கான வித்திடப்பட்டது. இந்த ஒற்றுமையில் மக்காவின் கோத்திரங்களும், அதன் அக்கம்பக்கத்து கோத்திரங்களும் இருந்தன. நஜ்த் மற்றும் மதீனாவிலிருந்து வடக்கு திசையில் இருந்த பகுதிகளின் கோத்திரங்களும் இருந்தன. யூதர்கள் இணைந்திருந்தனர். இந்த எல்லாக் கோத்திரங்களும் ஒன்றுசேர்ந்து, மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக ஒரு பயங்கரமான படையை ஆயத்தம் செய்தன.

மக்கத்து குறைஷியர்கள் 4000 பேர் கொண்ட படையை அழைத்துக் கொண்டு புறப்பட்டனர். அவர்களுக்கு அபூ சுஃப்யான் தலைமை வகித்தார். காலித் பின் வலீத் சவாரி படைகளின் தலைமை பொறுப்பை வகித்தார். பனூ சுலைம் கோத்திரத்தின் 700 பேரும் குறைஷியர்களுடன் வந்து இணைந்து கொண்டனர். சுஃப்யான் பின் அப்தி ஷம்ஸின் கையில் இவர்களின் தலைமை பொறுப்பு இருந்தது. பனூ அஸத் கோத்திரத்தினர் துலைஹா பின் குவைலத் தலைமையில் புறப்பட்டனர். பனூ ஃபஸாரா கோத்திரத்தின் ஆயிரம் பேர் புறப்பட்டனர். அவர்களுக்கு உயைனா தலைமை

வகித்தார். பனூ அஷ்ஜஃ மற்றும் பனூ மர்ரஹ் கோத்திரத்தின் 400, 400 பேர் புறப்பட்டனர். பனூ ஃகத்ஃபான் கோத்திரத்தின் தரப்பிலிருந்து 6000 போர் விரர்களை அனுப்புவதாக வாக்குறுதி இருந்தது. யூதர்கள் தரப்பிலிருந்து 2000 பேர் கொண்ட ரிசர்வ் படை இருந்தது. இவ்வாறு பல்வேறு கோத்திரங்களின் இந்தப் படைகளின் ஒட்டுமொத்த எண்ணிக்கை குறைந்தபட்சம் 10,000 பேர் என்றும், சில அறிவிப்புகளுக்கு ஏற்ப 24,000 வரை (இருந்ததாகவும்) கூறப்படுகிறது. இவர்கள் அனைவரின் தலைமை பொறுப்பு அபூ சுஃப்யான் பின் ஹர்ப் உடைய கையில் இருந்தது. இது அப்பொழுது வரையிலான அரேபியாவின் வரலாற்றின் மிகப்பெரிய போர் நடவடிக்கையாக இருந்தது.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** 10,000 எனும் ஊகத்தையே சரியானதாக ஏற்றுக் கொண்டாலும்கூட, அந்தக் காலத்தின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை எவ்வளவு அதிகமானதாக இருந்தது என்றால், அநேகமாக, அதற்கு முன்னர் அரேபியாவின் கோத்திரங்களின் சண்டைகளில் இவ்வளவு பெரிய எண்ணிக்கை ஒருபோதும் எந்தப் போரிலும் கலந்து கொள்ளவில்லை. உணவு மற்றும் பானங்களும், போர்த்தளவாடங்களும் எல்லா விதத்திலும் போதுமான அளவில், திருப்திகரமான அளவில் இருந்தன. இந்தப் படை ஹிஜ்ரீ 5 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம், கி.பி. 627 ஆம் ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் மதீனாவை நோக்கி முன்னேறத் துவங்கியது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** பல்வேறு வரலாற்றாசிரியர்கள் இந்தப் படையின் எண்ணிக்கையை 10,000 முதல் 24,000 வரை இருந்ததாக கணித்துள்ளார்கள். ஆனால், முழு அரேபியாவும் ஒன்றுபட்டதன் விளைவு வெறும் 10,000 போர் வீரர்களாக மட்டும் இருக்க முடியாது என்பது வெளிப்படையான விஷயம். நிச்சயமாக 24,000 என்கிற கணிப்பு அதிகம் சரியானதாகும். குறைந்தபட்சம், இந்தப் படை 18, 20 ஆயிரமாக கண்டிப்பாக இருக்கும். மதீனா ஒரு சாதாரண சிற்றூராக இருந்தது. அந்த சிற்றூருக்கு எதிராக முழு அரேபியாவின் தாக்குதல் ஒன்றும் சாதாரண தாக்குதலாக இருக்கவில்லை. மதீனாவின் ஆண்களைக் கூட்டினாலும், முதியவர்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகளை எல்லாம் சேர்த்தே வெறும் 3000 பேர் தான் இருந்திருப்பார்கள். அதற்கு எதிராக எதிரியின் படை 20 இலிருந்து 24 ஆயிரத்துக்கு இடைப்பட்டதாக இருந்தது. அதுவும் அவர்கள் எல்லாரும் போர்வீரர்களாக இருந்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* காஃபிர்களின் ஆயத்தங்கள் பற்றிய தகவல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தது. அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் அகழி தோண்டுவதாகத் தீர்மானித்தார்கள். இதன் விபரத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உளவுத்துறையும் இந்த எல்லா சூழ்நிலைகளையும் அறியாமல் இல்லை. நாலாப்புறத்திலிருந்தும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. குறைஷியர்கள் மற்றும் யூதர்களின் இந்த அச்சமூட்டுகின்ற திட்டத்தைப் பற்றிய தகவல் மதீனாவை வந்தடைந்ததும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபாவை ஒன்று திரட்டினார்கள். எதிரிகளின் தீய எண்ணங்களைப் பற்றி அவர்களுக்குத் தெரிவித்து, 'நாம் மதீனாவிலிருந்து வெளியேறி எதிர்கொள்ளலாமா அல்லது மதீனாவில் இருந்து கொண்டு இவ்வளவு பெரிய படையை எதிர்கொள்ளலாமா?' என்று ஆலோசனை செய்தார்கள்.

அறிவிப்புகள்படி ஹஸ்ரத் சல்மான் (ரலி) அவர்கள், 'நாங்கள் பாரசீக மண்ணில் குதிரைக் கூட்டங்களைக் கண்டு அஞ்சும்போது, அவற்றிற்கு முன்பு அகழிகளைத் தோண்டி விடுவோம்' என்று ஆலோசனை கூறினார்கள். இந்த ஆலோசனை

எல்லார்க்கும் பிடித்து விட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவில் இருந்து கொண்டு தற்காக்குமாறும், அகழி தோண்டுமாறும் ஆணையிட்டார்கள். சில வாழ்க்கை வரலாற்று நூல்களிலிருந்து தெரியவருவதாவது, ஹஸ்ரத் சல்மான் ஃபார்சீ (ரலி) அவர்களின் ஆலோசனையின் காரணமாக மட்டும், அகழி தோண்டுவதற்கான இந்த முடிவு மேற்கொள்ளப்படவில்லை; மாறாக, அல்லாஹ் இல்ஹாம் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த வழிமுறையைக் கூறினான். ஏனென்றால், அரேபியர்களுக்கு இந்த வழிமுறை முற்றிலும் புதியதாக இருந்தது.

இது குறித்து இந்தக் குறிப்பும் கிடைக்கிறது, காஃபிர்களின் படையால் அகழியைத் தாண்ட முடியாமற் போனதும், **அபூ சுஃப்யான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்.** அதில் 'லாத்' மற்றும் 'உஸ்ஸா' போன்ற சிலைகளைப் பற்றி குறிப்பிட்டு, 'அகழி தோண்டி நீங்கள் போரைத் தவிர்க்கிறீர்கள்' என்று எழுதியிருந்தார். **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்தக் கடிதத்துக்கு அபூசுஃப்யானுக்கு இவ்வாறு பதில் எழுதினார்கள்:** உனது கடிதம் கிடைத்தது. நீ எப்பொழுதுமே அல்லாஹ்வுக்கு எதிராக ஆணவத்தில் மூழ்கியிருக்கிறாய் என்பதை நான் அறிவேன். நீ உனது இந்த மாபெரும் படையை வைத்து, எங்களுடைய பெயரடையாளங்களை அழித்து விடுவதற்கான உறுதியான எண்ணம் கொண்டிருப்பது போன்ற ஒரு தாக்குதலை, மதீனாவின் மீது தொடுக்கப் போவதாகக் கூறியுள்ளாய். உன் அசுத்தமான எண்ணங்களுக்கு எதிராக இடைபட்டிருக்கும் இதுவோ அல்லாஹ்வின் கட்டளையாகும். நீ 'லாத்' மற்றும் 'உஸ்ஸா' ஆகிய சிலைகளின் பெயரைக்கூட மறந்து விடுவாய். அகழி தோண்டுவது பற்றி எனக்குக் கூறியது யார் என்று கேட்டிருக்கிறாயே, இந்த வழிமுறையை அல்லாஹ் எனக்கு இல்ஹாம் மூலம் அறிவித்துள்ளான். கேட்டுக்கொள்! இறுதியில் அல்லாஹ் எங்களை வெற்றி பெறச் செய்வான்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்தக் கடிதம் மூலம் தெளிவாகத் தெரிவதாவது, ஹஸ்ரத் சல்மான் ஃபார்சீ (ரலி) அவர்கள் ஆலோசனை வழங்கியிருப்பார்கள்தான்; ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதன்படி செயல்படுவதற்கான தீர்மானத்தை இல்ஹாம் மூலமாகவே எடுத்திருப்பார்கள்.

*இந்த விபரம் இனி தொடரும் என்று கூறிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பாக்கிஸ்தானின் நிலைமை தொடர்பாக துஆவிற்காக வலியுறுத்தியவாறு இவ்வாறு கூறினார்கள்:* இன்றைய நாள்களில் பாக்கிஸ்தான் அஹ்மதிகளை குறிப்பாக துஆக்களில் நினைவு கொள்ளுங்கள். பாக்கிஸ்தான் அஹ்மதிகள் தாமும் துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். சதக்கா கொடுப்பதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் அவர்களைப் பாதுகாப்பானாக! எதிரிகளின் தீங்கிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவானாக! தீயவர்களின் தீங்கை அவர்களுக்கே திருப்பிடுவானாக! பொதுவாக உலகத்தின் மேம்பாட்டுக்காவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் உலகையும் குழப்பங்களிலிருந்து காப்பாற்றுவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)